**இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களின் செயல்முறைகள்**
**ஆணையிடுபவர்: திரு.ச.சுரேஷ், பி.எஸ்சி., எம்.ஏ.,**

ந.க.அ3/1893/2021 நாள்:24.06.2021

பொருள்: பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி – இராணிப்பேட்டை மாவட்ட வருவாய் அலகு – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்திய 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள்-IV-ன் மூலம் தட்டச்சராக தெரிவு செய்யப்பட்டு ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு இராணிப்பேட்டை மாவட்ட வருவாய் அலகிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

படிக்க:
1. சென்னை, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்களின் கடித எண்.5526/PSD-F1/2020, நாள்:24.12.2020.
2. சென்னை, கூடுதல் தலைமைச் செயலர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். பணி 4(1)/20849/2019, நாள்:12.02.2021.
3. வேலூர், மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் ந.க.அ3/14/2021, நாள்:19.02.2021.
4. இராணிப்பேட்டை, மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் ந.க.அ3/1893/2021, நாள்:19.02.2021.

***

**ஆணை:-**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்திய 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-IV-ன் மூலம் தட்டச்சராக தெரிவு செய்து ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேலே-2ல் படிக்கப்பட்ட கடிதத்தின்படியும் மற்றும் மேலே-3ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின்படியும், இராணிப்பேட்டை மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேலே-4ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின்படி, இராணிப்பேட்டை மாவட்ட வருவாய் அலகில் பணிநியமனம் செய்யப்பட்ட கீழ்க்குறிப்பிட்ட நபர்கள் அவர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதி முதல் தட்டச்சராக பணிபுரிந்து வருகின்றனர்.

2) எனவே, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தட்டச்சர்களுக்கு அவர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதி முதல் அவர்களது பணியினை தமிழ்நாடு அமைச்சுப்பணியில் தட்டச்சர் பணியமைப்பில் வரன்முறை செய்தும், பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதிகாண் பருவம் துவக்கியும், தகுதிகாண் பருவம் 3 (மூன்று) ஆண்டு காலம் தொடர்ந்து பணியாற்றுதலுக்குட்பட்டு இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயம் செய்தும் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | தட்டச்சரின் பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்கள்) | தட்டச்சர் பணியமைப்பில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|
| 1. | ம.சரத்குமார்,<br>வட்டாட்சியர் அலுவலகம், சோளிங்கர். | 19.02.2021 பிற்பகல் |
| 2. | த.சந்தோஷ்குமார்<br>மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம்,<br>இராணிப்பேட்டை. | 19.02.2021 பிற்பகல் |
| 3. | மு.ஜான்சிராணி<br>வட்டாட்சியர் அலுவலகம், ஆற்காடு. | 19.02.2021 பிற்பகல் |

3) மேலும், இந்த பணிவரன்முறையானது 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டுகளுக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்திய ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு-IV-ல் அடங்கிய பணிக்கான தேர்வுகளில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிப்பேராணை மனுக்களின் மீது பிறப்பிக்கப்படும் தீர்ப்புரைகளுக்கு உட்பட்டது.

4) இந்த ஆணை குறித்து சம்மந்தப்பட்டவரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது.

ஒம்/-ச.சுரேஷ்,
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
இராணிப்பேட்டை.

/உத்தரவுப்படி/

24/6/21

அலுவலக மேலாளர்(பொது).

பெறுநர்
சம்மந்தப்பட்ட நபர்கள்.

24/6/21

நகல்: மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், இராணிப்பேட்டை.
நகல்: வட்டாட்சியர், சோளிங்கர் / ஆற்காடு.
நகல்: அ3 இருக்கைக்கு.